

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 14.1.2025 அன்று முகாம் அலுவலகத்தில், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மற்றும் அமைச்சர் பெருமக்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

கம்பம் - காசி முத்து மாணிக்கம்
நா. இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,
சிங்கை பிரபாகரன்

பாலக்கோடு - தஞ்சை கூத்தரசன்
பி. பழனியப்பன்
முனைவர் நா. சந்திரபாபு

ஆரணி - கரூர் முரளி
எம்.எஸ். தரணிவேந்தன், எம்.பி.,
பேரணாம்பட்டு இராஜேந்திர பிரசாத்

துறையூர் - நந்தனம் நம்பிராஜன்
காடுவெட்டி
நா. தியாகராஜன், எம்.எல்.ஏ.,
சாவல்பூண்டி மா. சுந்தரேசன்

மேலூர் - முனைவர் பொன்னேரி சிவா
மாண்புமிகு பி. மூர்த்தி
வயலூர் கிருஷ்ணமூர்த்தி

மேட்டூர் - வேலூர் கென்னடி
டி.எம். செல்வகணபதி, எம்.பி.,
நெய்வேலி தங்கம்

தூத்துக்குடி - அத்திப்பட்டு சாம்ராஜ்
மாண்புமிகு கீதா ஜீவன்
இரம்ஜான் பேகம்

திருமயம் - ஆடுதுறை உத்திராபதி
மாண்புமிகு எஸ். ரகுபதி
ஈகை தனசேகர்

உளுந்தூர்பேட்டை - சைதை சாதிக்
தா. உதயசூரியன், எம்.எல்.ஏ.,
கம்பம் பாண்டியன்

பட்டுக்கோட்டை - வே. மதிமாறன்
க. அண்ணாதுரை, எம்.எல்.ஏ.,
மதுரை சேவியர்

புதுக்கோட்டை - தஞ்சை கலைமணிபாரதி
கே.கே. செல்லபாண்டியன்
மங்கலம் பிரபாகரன்

தென்காசி - தமிழ் கா. அமுதரசன்
நா. ஜெயபாலன்
பூங்காநகர் கண்ணன்

விருத்தாசலம் - சோம. செந்தமிழ்ச்செல்வன்
மாண்புமிகு சி.வெ. கணேசன்
வேலூர் இரமேஷ்

திருவெறும்பூர் - சென்னை த. அரங்கநாதன்
பரிதி இளம்சுருதி

திருச்செந்தூர் - ஆரூர் மணிவண்ணன்
மாண்புமிகு
அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்
திருப்பூர் கூத்தரசன்

ஒட்டன்சத்திரம் -
தூத்துக்குடி சரத்பாலா
மாண்புமிகு அர. சக்கரபாணி
ஆம்பூர் தருமன்

புதுச்சேரி - கந்திலி கரிகாலன்
புதுவை ஆர். சிவா, எம்.எல்.ஏ.,
குடந்தை ராமகிருஷ்ணன்

இராஜபாளையம் - வரகூர் காமராஜ்
மாண்புமிகு
கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்
கவிஞர் சிவமுத்து வளவன்

தஞ்சாவூர் - வழக்கறிஞர் சிவ. ஜெயராஜ்
துரை. சந்திரசேகரன், எம்.எல்.ஏ.,
விசார் க. தமிழரசன்

மயிலாடுதுறை - நாத்திகம் நாகராசன்
நிவேதா எம். முருகன், எம்.எல்.ஏ.,
பொள்ளாச்சி சித்திக்

உதகை - பவானி கண்ணன்
பா.மு. முபாரக்
திருப்பூர் ரஜினி செந்தில்

திருமங்கலம் - சேலம் சுஜாதா
மு. மணிமாறன்
பழனி அப்பாஸ்

கோபிசெட்டிபாளையம் - போடி காமராஜ்
என். நல்லசிவம்
குடியாத்தம் அன்பு
ஜெ. வீரமணி

அண்ணாநகர் - பசும்பொன் இரவிச்சந்திரன்
நே. சிற்றரசு
க. எழிலன்

காரைக்கால் - கோவி. லெனின்
எச். நாஜிம்
ஆலங்குடி செல்வராஜ்

பெரியகுளம் - சிவாஜி கிருஷ்ணமூர்த்தி
தங்க. தமிழ்செல்வன், எம்.பி.,
கு. வாஞ்சிநாதன்

மன்னார்குடி - மதுரை அலெக்சாண்டர்
திருப்பூர் மனோகர்பாபு
மன்னை த. சோழராஜன்

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி
**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18

## கிருஷ்ணகிரி கிழக்கு

# மாவட்டக் கழக அலுவலகத்தில் சமத்துவப் பொங்கல் விழா!

### மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

கிருஷ்ணகிரி, ஜன.18- தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.

வாழைமரம், கரும்பு, மஞ்சள் தோரணங்கள் கட்டி, புதுப்பாணையில், புத்தரிசியிட்டு பொங்கலிட்டு பொங்கலோ பொங்கல் என பொங்கி மகிழ்ந்து அனைவருக்கும் பொங்கல் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்தி கடலரசு மூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், நாகராசன், பாலன், கோதண்டன், சித்ரா சந்திரசேகர், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகர், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, அறிஞர், குமரேசன் உள்ளிட்ட நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



குன்னூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவினை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் சமத்துவப் பொங்கல் நடைபெற்று வருவதனை தொடர்ந்து குன்னூர் ஒன்றிய தி.மு.க. சார்பில் குன்னூர் பெள்ளட்டிமட்டம் பகுதியில் குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் ஏற்பாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பொங்கல் வைக்கும் விழாவில் அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கழக இரு வர்ணக் கொடியினை ஏற்றி பொதுமக்களுடன் இணைந்து சமத்துவப் பொங்கல் விழாவினை கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்டத் துணை கழக செயலாளர் செல்வி.லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டம் 15 வேலம்பாளையம் பகுதிக்குட்பட்ட, 1வது வார்டு மாரியம்மன் கோவில் திடலில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவை மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ் துவக்கி வைத்து பொது மக்களுக்கு சக்கரை பொங்கலை வழங்கினார். இதில் வடக்கு மாநகரச் செயலாளர், மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார், பகுதி செயலாளர் கொ.ராமதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதுவரை ரூ. 6 கோடியே 15 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது

2012 சூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தியும் வழங்கப்படுகிறது.

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.**

**வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.**

**2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ.6 கோடியே 15 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/– (இரண்டு லட்சம்) 16–01–2025 அன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.**

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பழனிவேல், தாழம்பட்டு, மாளிகம்பட்டு அஞ்சல், பண்ருட்டி, கடலூர் மாவட்டம். | 25,000/– |
| 2. | மாதவரம் எம்.பி.நடராசன், பொன்னியம்மன்மேடு, சென்னை. | 25,000/– |
| 3. | ஆர். அண்ணாமலை, திரியாலம் அஞ்சல், திருப்பத்தூர் மாவட்டம். | 25,000/– |
| 4. | செல்லப்பன், அருகாவூர் அஞ்சல், பெரும்பள்ளம், திருவண்ணாமலை மாவட்டம் | 25,000/– |
| 5. | எஸ்.இராமதாஸ், நெடிமோழியனூர், மயிலம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் | 25,000/– |
| 6. | இருசன், காட்டுக்கொட்டகை, எடுத்தவாய்நத்தம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி | 25,000/– |
| 7. | என்.அகமது கபீர், புதுவலசை, மண்டபம், இராமநாதபுரம் மாவட்டம். | 25,000/– |
| 8. | எம்.பொன்னுச்சாமி, வார்டு19, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

# கழகக் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பி.ஆர்.சுந்தரம் மறைவு!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., அமைச்சர் மா.மதிவேந்தன், எஸ்.எம்.மதுரா செந்தில் அஞ்சலி!

நாமக்கல், ஜன.18- முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினரும், கழக மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளருமான பி.ஆர். சுந்தரம் நேற்று முன்தினம் (16.01.2025 ) காலை 8 மணி அளவில் ராசிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பி ஆர் சுந்தரம் உடலுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

பி.ஆர். சுந்தரம் (2.4. 1951-16.01.2025) சொந்த ஊர். ராசிபுரம் அருகே உள்ள பச்சுடையாம்பாளையம். மனைவி எஸ். சுந்தரி, மகன் சுந்தர் தினேஷ் அமெரிக்காவில் பணிபுரிந்து வருகிறார். இவர் 1996 - 2006 வரை இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும், (2014 - 2019) வரை நாமக்கல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

ஒரு முறை பச்சுடையாம்பாளையம் பஞ்சாயத்து தலைவராகவும், ஒரு முறை மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினராகவும், ஒரு முறை மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவராகவும் இருந்துள்ளார்.

இவர் அ.தி.மு.க.வில் 1997 முதல் 2000 வரை அதிமுக மாவட்ட செயலாளராகவும் 2001 முதல் அவைத்தலைவராகவும் இருந்துள்ளார். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அ.தி.மு.க.வில் இருந்து விலகி, தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 17.1.2021 தி.மு.க.வில் இணைந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளராக இருந்து வந்துள்ளார்.



நாகை மாவட்டம் தி.மு.க. மற்றும் நாகை நகர தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் மற்றும் சமத்துவப் பொங்கல் நாளை முன்னிட்டு இருசக்கர வாகன பேரணி பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், நாகை நகர கழக செயலாளர் இரா மாரிமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.